விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–03.20 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –03.35 p.m.
மீண்டும் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் – 04.00 p.m. முடிக்கப்பட்ட நேரம் –04.30 p.m.

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.I, Mettur**
**Case No : CC 187/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 13.08.2024**

| | |
|---|---|
| **Name : சந்திரா** | **Taluk : மேட்டூர்** |
| **Husband Name : கோவிந்தன்** | **Calling : கூலிவேலை** |
| **Village : பெரியசோரகை** | **Age : 42** |

**(Both Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரியசோரகையில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 24.10.2019 ம் தேதி காலை 08.00 மணியளவில் எங்கள் வீட்டு அருகில் சுமார் 10 நாய்கள் சண்டை போட்டு கொண்டிருந்தது. அதை என் கணவர் துரத்தி விட்டு வந்தார். காலை 11.00 மணி வரை யாரும் கேட்கவில்லை. நான் என்னுடைய சின்ன மகனை அழைத்துக்கொண்டு தாராமங்கலத்தில் துணி எடுக்க சென்றுவிட்டேன். எனது கணவரும் நங்கவள்ளி சென்றுவிட்டார். வீட்டில் எனது மகள் கார்த்திகேயனி மட்டும் இருந்தார். அவருக்கு கண் பார்வை தெரியாது. அவர் மாற்றுதிறனாளி. அப்போது பெருமாள் அவருடைய மகன்கள் ஜெகதீஷ், சுதாகர் கூட்டிக் கொண்டு வந்து தேவடியா கண்டராஓலி என்று பேசி எனது மகள் அருகில் இருந்த நாயை அடித்தபோது எனது மகளின் தொடையில் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டது. பிறகு எனது மகள் போன்செய்து எதிரிகள் தன்னை கெட்ட வார்த்தையால் திட்டி,

அடித்துவிட்தாக சொன்னார். மாலை 03.00 மணியளவில் பால்வாடி அருகே நின்று கொண்டிருந்த பெருமாளிடம் நான் இல்லாதபோது எதற்காக என் மகளை அடித்தாய் என்று கேட்டேன். அதற்கு பெருமாள் அறுவருக்கதக்க கெட்ட வார்த்தையால் திட்டி அப்படி தான் அடிப்பேன் என்று சொன்னார். அவர் என்னை தொரத்தியதால் நான் வீட்டிற்கு சென்றேன். வீட்டிற்கு வந்த எனது கணவரிடம் நடந்ததை சொன்னேன். அவரும் சென்று பெருமாள் கேட்தற்கு பெருமாள் எனது கணவரை கெட்ட வார்த்தையால் திட்டி அவரது மகன்கள் செங்கலால் என்னையும், என் கணவரையும் அடித்தார்கள். நாங்கள் ஓடி வீட்டிற்குள் சென்றோம். வீட்டிற்கு வெளியே இருந்த மம்மூட்டியை எடுத்து பெருமாள் என்னை மண்டையில் அடித்து விட்டார். எதிரிகள் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். பிறகு பெருமாளின் மருமகன் மற்றும் பெரிய பொண்ணு ஆகியோர்கள் வந்து எங்கள் வீட்டை வீடியோ எடுத்து எங்களை கொலை மிரட்டல் விடுத்தார்கள். நானும் எனது கணவரும் நங்கவள்ளி மருத்துவமனைக்கு சென்று முதலுதவி எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து விட்டோம். அடுத்த நாள் தனியார் மருத்துவமனையில் முதலுதவி எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து விட்டோம். இது சம்மந்தமாக நங்கவள்ளி காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமான புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். **(புகாரில் உள்ள கையெழுத்து அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த அன்றைய தினமே புகார் அளித்து விட்டேமோ என்றால் அன்றை தினமே காவல்நிலையத்தில் தகவல் அளித்து

விட்டோம். 24.10.2019 ம் தேதி போலீசாரிடம் என் கணவர் எழுதி கொடுத்த புகாரை காவல் நிலையத்தில் கொடுத்துவிட்டோம். சம்பவம் நடைப்பெற்ற மறுநாள் 25.10.2019 ம் அன்று காலை 10.00 மணிக்கு போலீசார் வந்த எங்களை வீட்டை பார்த்து சென்று விட்டார்கள். எங்கள் குடும்பத்தாருக்கும் எதிரி குடும்பத்தாருக்கும் சின்ன சண்டைகள் கடந்த 2, 3 வருடங்களாகவே அடிக்கடி நடைபெறும். இதற்கு முன் போலீசாரிடம் எதிரிகள் மீது எவ்வீத புகாரும் கொடுக்கவில்லை. இது சம்மந்தமாக எங்கள் ஊரைச் சேர்ந்த அனைவருக்கும் எங்களுக்குள் சண்டை செய்துகொள்வது தெரியும். எதிரிகளின் பிள்ளைகள் எங்களிக் பிள்ளைகளுடன் பேசிக்கொண்டுதான் உள்ளார்களா என்றால் இல்லை. 24.10.2019 ம் தேதி மதியம் நடந்த சம்பவம் நடைப்பெற்றப்போது நானோ என் கணவரோ வீட்டில் இல்லை என்றால் சரிதான். அக்கப்பக்கம் இருந்தவர்கள் சத்தம் போட்டவர்களை விலக்கி விட்டார்களா என்று தெரிந்துக்கொண்டேன் என்றால் தெரிந்துக் கொள்ள வில்லை. நான் வீட்டிற்கு 03.00 மணிக்கு வந்தேன். என் கணவர் 03.30 மணிக்கு வந்தார். நாங்கள் வீட்டிற்கு வரும்போது ஆஜர் எதிரிகள் பக்கத்தில் உள்ள பால்வாடியில் நின்றுக்கொண்டிருந்தார்கள். நானும் எனது வீட்டுக்காரரும் எதிரிகளை தாக்குவதற்காக எங்கள் வீட்டிலிருந்து மம்மூட்டியை எடுத்துச்சென்றோம் என்றால் சரியல்ல. நீங்கள் தான் அவர்களை அடித்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை மட்டும்தான் செய்துக்கொண்டோம். எனக்கு உண்மையில் அடிப்பட்டு இருந்தால் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. எனக்கோ எனது கணவருக்கோ

மற்றும் மகளுக்கோ எவ்வித வெளிப்புற காயமும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைப்பெற்று இருந்திருந்தால் சம்பவம் நடைப்பெற்ற உடனே காவல் நிலையம் சென்று இருப்பீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் இடத்தை யார் யாரை விசாரித்தார்கள் என்றால் மாரியம்மாள், முத்து, தாண்டவன் ஆகியோர்களை போலீசார் விசாரித்தனர். போலீசாரிடம் எதிரிகள் வீட்டை அடையாளம் காட்டினோமோ என்றால் சம்பவம் இடம் குறித்து எதிரிகள் வீட்டை குறித்து நான், மாரியம்மாள், மற்றும் எனது கணவர் தான் அடையாளம் காட்டினோம். நான் 8 வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் எழுதிக்கொடுத்த புகாரை நான் படித்து பார்த்தேன், படித்து பார்த்து தான் சரியாக உள்ளது என்று எழுதி கையெப்பாம் செய்தேன் என்றால் சரிதான். முன் விரோதத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் மேற்படி வழக்கு சம்மதம் இல்லை நீங்கள் தான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>

**ஒம்/−அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**